𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾.

௫-ம்
புத்தகம்
பத்திரகிரயம்
1 ௵ 2—12—0
6 ௴ 1—8—0
3 ௴ 0—14—0
1 காபி - 0—2—0
இலங்கைக்கு
3—8—0

ப்ரம்மவித்தியாபத்திரிகை.

மாதம்
இருமுறை
பிரசுரஞ் செய்யப்படும்

௰௪-ம்
இலக்கம்

பத்திரகிரயத்தைமணிபார்டராக வரவிடு ரூ. 1-க்கு அணா 1. சேர்த்து தபால்லேபிலாகவாவது சிதம்பரம் ப்ரம்மவித்தியாப்ரெஸ்மானேஜருக்கு அனுப்புதல்வேண்டும்.

[illegible]॥ [illegible]॥

சிதம்பரம்:— ௧௮௮௮௵ நவம்பர்௴ ௩௰உ சர்வதாரி௵ கார்த்திகைமீ ௧௭உ

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾.

𑌚𑌿𑌦𑌮𑍍𑌬𑌰𑌮𑍍 𑌸𑌰𑍍𑌵𑌧𑌾𑌰𑌿𑌸𑌂𑌵𑌤𑍍𑌸𑌰𑌃-𑌵𑍃𑌶𑍍𑌚𑌿𑌕𑌮𑌾𑌸𑌃-௧௭உ

𑌵𑌿𑌗𑍍𑌰𑌹𑌾𑌰𑌾𑌧𑌨𑌮𑍍

[𑌅𑌨𑍁𑌬𑌨𑍍𑌧𑌃]

𑌆𑌰𑍍𑌯𑌾𑌃!!

𑌨 𑌵𑌯𑌂 [illegible] 𑌭𑌗𑌵𑌤𑌃 𑌪𑌾𑌞𑍍𑌚𑌭𑍌𑌤𑌿𑌕 [illegible] 𑌶𑌰𑍀𑌰𑌂 [illegible] 𑌶𑌰𑍀𑌰𑍀𑌵. [illegible] 𑌭𑌗𑌵𑌤𑍍𑌪𑌾𑌦𑌾𑌃 “𑌸𑍍𑌯𑌾𑌦𑍀𑌶𑍍𑌵𑌰𑌸𑍍𑌯𑌾𑌪𑍀𑌚𑍍𑌛𑌾𑌵𑌶𑌾𑌨𑍍𑌮𑌾𑌯𑌾𑌮𑌯𑌂 𑌶𑌰𑍀𑌰𑌂 𑌸𑌾𑌧𑌕𑌾𑌨𑍁𑌗𑍍𑌰𑌹𑌾𑌰𑍍𑌥𑌮𑍍” 𑌇𑌤𑌿 [illegible] 𑌬𑌿𑌮𑍍𑌬𑌾𑌰𑌾𑌧𑌨𑌂 [illegible] 𑌬𑌿𑌮𑍍𑌬𑌾𑌰𑌾𑌧𑌨𑌮𑍇𑌵? 𑌉𑌤 [illegible]? [illegible] 𑌬𑌿𑌮𑍍𑌬𑌾𑌦𑍇𑌃 𑌆𑌰𑌾𑌧

ப்ரம்மவித்தியா.

சிதம்பரம்:—1888 நவம்பர்௴ 30உ வெள்ளிக்கிழமை

விக்கிரகாராதனம்

தொடர்பு

கடவுளுக்குப் பஞ்சபூதங்களால் அமைந்தசரீரம் உண்டெனக்கூற யாம் துணிந்தோமில்லை. ஆனால் அவனுக்குச் சரீரம் உண்டென்பதுமட்டில் எமதுகருத்து. அப்பரம்பொருள் உருவமற்று உலகெலாம் நிறைந்ததாயினும், தமதுதொண்டர் தியானித்துக் களிகூறவேண்டி ஓர் திருவடிவைக்கொண்டே அனுக்கிரகிக்கின்றது. அது உண்மையில் சரீரமற்றதாயினும், சரீரம் உள்ளவத்துவைப்போல் தோன்றுகின்ற தன்மை. ஆதலாற்றான் உலகெலாங்கடந்து உண்மைப்பொருளாகத் தன்னைநோக்கத்தனித்து மறுபொருளிலாத மகிமைதாங்கிய பரம்பொருளொன்றே வாய்மை என நிலைநாட்டவந்த பரமாசாரியரான சங்கராசாரியசுவாமிகளும் தாம் எழுதிய பிரமசூத்திரபாஷியத்தில் ‘‘ஈசுவனுக்கு விருப்பத்தால் மாயாமயமானசரீரம ஒன்றிருக்கலாம்’’ என்று எடுத்துரைத்தார். ஆராயுங்கால் கடவுளுக்குச் சரீரமும் உண்டென்று வேதங்கள் விளக்குகின்றன. சிலமந்திரங்கள் சரீரமுள்ளவர் எனத்தீட்டிக்காட்டுகின்றன. இதில்முதலில் ஆராயவேண்டியது யாதெனில், உலகத்தில் கைகால்முதலிய அமைப்புள்ள உருவத்தை ஆராதித்தலே பிம்பாராதனமா? அல்லது மரம், கல், கட்டை, உலோகம் முதலியவற்றில் பூஜித்தலும் பிம்பாராதனமா? என்பதே. இவற்றுள்முதற்பாகம் அவ்வாதிக்குச் சம்மதமாயின், சிவலிங்கம், அரசமரத்தின் வேர், திலம், புற்று, வில்வம், சூரியமண்டலம் இவற்றின்கண் ஆராதித்தல் இவ்வாதிக்குச்சம்மதமாம்போலும்; அற்றேல் இரண்டாவதுசொன்னதே சம்மதமாயின், அவர் ‘‘விக்கிரகம் என்பது கடவுளுக்குப் போலி உருவம்,, என்றுரைத்தது

[illegible] 𑌤𑌸𑍍𑌯 [illegible] 𑌕𑍃𑌤𑌿𑌰𑌿𑌤𑌿 𑌵𑌿𑌗𑍍𑌰𑌹 [illegible] 𑌨𑌿𑌰𑌵𑌯𑌵 [illegible] 𑌯𑌥𑌾 𑌤𑌥𑌾 [illegible] 𑌭𑌵𑌤𑌿. 𑌤𑌤𑍍𑌰 [illegible] 𑌶𑌰𑍀𑌰𑌂 𑌜𑌗𑌤𑍍 [illegible] 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌷𑍁 𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇. 𑌯𑌥𑌾𑌨𑍍𑌤𑌰𑍍𑌯𑌾𑌮𑌿𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍇 ‘𑌯𑌸𑍍𑌯 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀 𑌶𑌰𑍀𑌰𑌂 “𑌯𑌸𑍍𑌯𑌾𑌪𑌃 𑌶𑌰𑍀𑌰𑌂” 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿 [illegible] 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍇 𑌇𑌤𑌿 [illegible] 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌸𑍍𑌯 [illegible] 𑌯𑌥𑌾 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍇𑌷𑍁 “𑌸𑍍𑌥𑌿𑌰𑍇𑌭𑌿𑌰𑌙𑍍𑌗𑍈𑌃 𑌪𑍁𑌰𑍁𑌰𑍂𑌪 𑌉𑌗𑍍𑌰𑌃” “𑌯𑍋 𑌰𑍁𑌦𑍍𑌰𑍋 𑌅𑌗𑍍𑌨𑍌 𑌯𑍋 𑌅𑌪𑍍𑌸𑍁 𑌯 𑌓𑌷𑌧𑍀𑌷𑍁” “𑌯𑍋 𑌰𑍁𑌦𑍍𑌰𑍋 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾 𑌭𑍁𑌵𑌨𑌾𑌵𑌿𑌵𑍇𑌶” “𑌰𑍁𑌦𑍍𑌰𑍋 𑌵𑌾 𑌏𑌷 𑌯𑌦𑌗𑍍𑌨𑌿𑌃” 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿 𑌕𑌿𑌂 𑌚 𑌤𑌸𑍍𑌯 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌸𑍍𑌯 𑌨𑌿𑌰𑌵𑌯𑌵𑌤𑍍𑌵𑍇 [illegible] 𑌯𑌥𑌾 “𑌅𑌵𑌤𑌤𑌧𑌨𑍍𑌵𑌾 𑌪𑌿𑌨𑌾𑌕𑌹𑌸𑍍𑌤𑌃 𑌕𑍃𑌤𑍍𑌤𑌿𑌵𑌾𑌸𑌾𑌃” “𑌬𑌾𑌹𑍁𑌭𑍍𑌯𑌾𑌂 𑌤𑌵 𑌧𑌨𑍍𑌵𑌨𑍇” “𑌬𑌾𑌹𑍁𑌭𑍍𑌯𑌾𑌮𑍁𑌤 𑌤𑍇 𑌨𑌮𑌃” “𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌰𑍇𑌤𑌂 𑌵𑌿𑌰𑍂𑌪𑌾𑌕𑍍𑌷𑌂” 𑌇𑌤𑌿 𑌤𑌥𑌾 𑌋𑌕𑍍𑌷𑍍𑌵𑌪𑌿 ‘𑌯𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣 𑌉𑌜𑍍𑌜𑌹𑌾𑌰 𑌪𑍍𑌰𑌾𑌣𑍈𑌃 𑌶𑌿𑌰𑌃 𑌕𑍃𑌤𑍍𑌤𑌿𑌵𑌾𑌸𑌾𑌃 𑌪𑌿𑌨𑌾𑌕𑍀” 𑌤𑌥𑌾 𑌉𑌪𑌨𑌿𑌷𑌤𑍍𑌸𑍁 ‘𑌉𑌮𑌾𑌸𑌹𑌾𑌯𑌂 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌂 𑌪𑍍𑌰𑌭𑍁𑌂 𑌤𑍍𑌰𑌿𑌲𑍋𑌚𑌨𑌂 𑌨𑍀𑌲𑌕𑌣𑍍𑌠𑌂 𑌪𑍍𑌰𑌶𑌾𑌨𑍍𑌤𑌂’ ‘𑌯 𑌏𑌷𑍋𑌽𑌨𑍍𑌤𑌰𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑍇 𑌹𑌿𑌰𑌣𑍍𑌮𑌯𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌶𑍍𑌮𑌶𑍍𑌰𑍁𑌃 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌕𑍇𑌶𑌃’ 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑍁𑌪𑌨𑌿𑌷𑌦𑍍𑌵𑌾𑌕𑍍𑌯𑍇𑌷𑍁 [illegible] 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌸𑍍𑌯 [illegible] 𑌯𑌤𑌃 [illegible] ‘𑌪𑍁𑌰𑍁𑌰𑍂𑌪𑌃’ 𑌇𑌤𑌿. [illegible] ‘𑌯𑍋 𑌰𑍁𑌦𑍍𑌰𑌃’ 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌷𑍁 [illegible]

எட்டுணையுமமையாது. ஏனெனில் பிம்பம் என்பது கைகால் முதலிய அவயவங்கள் அமையப்பெறினும் பெறாவிடினும் மனிதன் அப்பரம்பொருளைத் தியானித்தற்கு ஒரு எளிய சாதனமாயிருப்பதாதலால், அது சரீரம் என்றேசொல்லல் அமையாது. ஆராயின் அப்பரமனுக்கும் உலகத்தினும் வேறான சரீரம் இருப்பதாய்த் தக்கபிரமாணம் கிடைக்கவில்லை. "உலகமே அவனதுசரீரம்,, என்றே வேதங்கள் கூறிநிற்கின்றன. அந்தர்யாமி பிராமணம் இவற்றில "எவனுக்கு பூமிசரீரம் எவனுக்கு ஜல சரீரம்,, என்று, முடிவில் எல்லாவத்துக்களும் சரீரங்கள் என்றுகாட்டப்பட்டன. இனி அது மந்திரமல்ல; பிராமணமே; அதை நான் ஒப்பேனென்று அவ்வாதியார் ஒருசமயம் உரைத்தால், மந்திரங்களிலும் கடவுளுக்குச் சரீரம் உண்டென்பதைவெளியாக்குவோம். அஃதை மேலே பிரமாணங்களைப்பற்றிச்சொல்லுமிடத்துக் கூறுவாம். அதேவிடத்து இவ்வாதியார் கொண்டபடி மந்திர லக்ஷணம் ப்ரம்பவிலக்கணம் இவைமுதலியவை யுக்திக்கும் சாஸ்திரங்களுக்கும் உடன்பாடலலவென்றும் விரிப்பாம். இனிக்கடவுளுக்கு ரூபம் உண்டென்பது அடியில்காட்டப்படும் மந்திரங்களால் அறிக. (க) ‘𑌸𑍍𑌥𑌿𑌰𑍇𑌭𑌿𑌰𑌙𑍍𑌗𑍈𑌃 𑌪𑍁𑌰𑍁𑌰𑍂𑌪 𑌉𑌗𑍍𑌰𑌃’ ஸ்திரோபிரங்கை: புருருபஉக்கிரக: 𑌯𑍋 𑌰𑍁𑌦𑍍𑌰𑍋 𑌅𑌗𑍍𑌨𑍌 𑌯𑍋 𑌅𑌪𑍍𑌸𑍁 𑌯𑍋 𑌰𑍁𑌦𑍍𑌰𑍋 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾 𑌭𑍁𑌵𑌨𑌾𑌵𑌿𑌵𑍇𑌶” யோருத்திரோ அக்னௌயொஅப்ஸு யொருத்ரோவிசுவாபுவனாவிவேசா ‘𑌰𑍁𑌦𑍍𑌰𑍋 𑌵𑌾 𑌏𑌷 𑌯𑌦𑌗𑍍𑌨𑌿𑌃’ ருத்ரோவாஏஷயதக்னி,, என்பனவை முறையே அழியா அவயம்பெற்ற பலரூபம் உள்ளவன்,, அக்கினியினும் அப்புவிலும் உலகப்பொருளனைத்திலும் உள்ளவன்,, அக்கினியின்கண் உதிப்பவன்,, என்பதுபொருளாம். இம்மட்டோ! மற்றும் அநேகமந்திரங்கள் அநேக அவயவங்களுடன் அநேக உருவங்கள் அவனுக்குண்டென விளக்குகின்றன. எங்ஙனமெனில் 𑌅𑌵𑌤𑌤𑌧𑌨𑍍𑌵𑌾 𑌪𑌿𑌨𑌾𑌕𑌹𑌸𑍍𑌤𑌃 𑌕𑍃𑌤𑍍𑌤𑌿𑌵𑌾𑌸𑌾𑌃 அவதத்தன்வாபினாகஹஸ்தக கிருத்திவாஸா,, 𑌬𑌾𑌹𑍁𑌭𑍍𑌯𑌾𑌂 𑌤𑌵 𑌧𑌨𑍍𑌵𑌨𑍇 பாகுப்யாம்தவதன்வனே,, 𑌬𑌾𑌹𑍁𑌭𑍍𑌯𑌾𑌮𑍁𑌤 𑌤𑍇 𑌨𑌮𑌃 பாகுப்யாம்உததேநம,, 𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌰𑍇𑌤𑌂 𑌵𑌿𑌰𑍂𑌪𑌾𑌕𑍍𑌷𑌂 ஊர்துவரேதம்விருபாக்ஷம்,, இவற்றின்கருத்து முறையே "நாண்கழற்றியபினாகத்தைக் கைக்கொண்டு யானையுரிபோற்றி,, என்றும் "விற்றாங்கின உமதுகைகள்,, என்றும் ‘உமது கைகளுக்கு வணக்கம், என்பதும் ‘மகாயோகி முக்கண்ணன்,, என்பதுமே. அவ்விதம் இருக்குவேதத்தின்கண்ணும் "𑌯𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣 𑌉𑌜𑍍𑌜𑌹𑌾𑌰 𑌪𑍍𑌰𑌾𑌣𑍈𑌃 𑌶𑌿𑌰𑌃 𑌕𑍃𑌤𑍍𑌤𑌿𑌵𑌾𑌸𑌾𑌃 𑌪𑌿𑌨𑌾𑌕𑍀 யோப்ரம்மாப்ரம்மண உஜ்ஜஹாரப்ராணைச்சிரககிருத்திவாஸாகபிநாகி,, இதன்பொருள் (எவன்பிரமன் பிரமதேவனின் தலையைக்கிள்ளினன், பினாகி) என்பது. அங்ஙனமே உபநிடதங்களில் "𑌉𑌮𑌾𑌸𑌹𑌾𑌯𑌂 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌂 𑌪𑍍𑌰𑌭𑍁𑌂 𑌤𑍍𑌰𑌿𑌲𑍋𑌚𑌨𑌂 𑌨𑍀𑌲𑌕𑌣𑍍𑌠𑌂 𑌪𑍍𑌰𑌶𑌾𑌨𑍍𑌤𑌂,, உமாசகாயம்பரமேசுவரம் பிரபும்திருலோசனம் நீலகண்டம் பிரசாந்தம்,, பொருள் [உமையுடன்கூடினவன்பரமேசுரன் முக்கண்ணன் நீலகண்டன் சாந்தன் என்பது "𑌯 𑌏𑌷𑍋𑌽𑌨𑍍𑌤𑌰𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑍇 𑌹𑌿𑌰𑌣𑍍𑌮𑌯𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃,, யஏஷோந்தராதித்யேஹிரண்மயப் புருஷக,, பொருள் [சூரியமண்டலத்தினுள் எவன் சுவர்ணபுருஷனோ] என்பது,, என்றதொடக்கிய மந்திரங்கள் பலவுள. ஆதலால் இங்குள்ள அணி பிது

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

கடவுளுக்கு அவனுக்கென ஓர்உருவம் வேறாய் இல்லாவிடினும் 'அவன பல ரூபங்கொண்டவன், என வேதம்சாற்றுதலால் அவனுக்கு ரூபங்கள் பலவுள-அங்ஙனமேஅவனுக்குபிருதிவி அப்புமுதலிய வஸ்துக்களிற்றானே ஆவிர்பாவத்தை '[illegible]' முதலியவேதங்கள் கூறுகின்றன. ஆதலால் நம்மைப்போன்ற சரீரம் அவருக்குஇல்லையாயினும் அவருக்கு உண்மையில் உரு ம்என்பதே உண்மையெனத் தம்மைத்தியானித்துத் தொ புரியவேண்டுவோர் உள்ளத்துக்கிசைந்து எங்குந்தோன்று ஆங்காங்குதோன்றமிடம் அததுவேசரீரமாகும். எங்ஙனில், மனம்என்பது நேரில் ரூபமற்றவஸ்துவைக் கவரு மனம் இயல்பாய் ஐம்புலன்வழி அனுபவித்து வந்து னுமா அனுபவிக்கத்தக்க பொருளேனும் ஒன்றிருந்தா மஅதை நினைந்துநிற்குமேயன்றி பற்றதை நினைக்க அதற்குத்தகுந்த இயற்கையையுடைத்தன்று என்பது அனுபவம். இனி கடவுள் கருணைக்கடலாயினும் அவர் உருவமற்றவர்; நம்மனது கெட்டார்; ஆயின் நாம் நற்கதிபெறுவது எவ்வாற்றானுமில்லை. ஆகையால்பரமனே சர்வவல்லமைபெற்றானாதலால் எமக்குமுன்தோன்ற ஓர் வடிவங்கொள்வான். அவன்கொள்ளும் சரீரம் தொண்டரது பாவனையைப் பொறுத்தே நிற்கின்றது இனி அவ்விதரூபங்கள் பரமனுக்குப்பலவுளவேனும் நாம் வைதிகர்களாதல்பற்றி வேதத்தில் எடுத்தோதிய ரூபங்களையே பாவிப்போம், மற்றதைத்தொடோம். இவ்விதமே யாம் வைதிகர்களுக்களிக்கும் விடை. அவைதிகராயின் அவர்களிடம் யுக்தியைக்காட்டுவோம். அதுமாத்திரையால் நம்பொருளுக்குப்பூர்ணத்தன்மை குன்றாது. சரீரத்தைப்பற்றிசுகதுக்கங்கள் வந்தணுகாது. எனில், வேதத்தாலேனும் மனிதன் தன்புத்தியாலேனும் பாவிக்கப்படும் சரீரம் கடவுளுக்கு அபிமானம்வைக்க இடமாயினும், அது தொண்டர்பொருட்டேயன்றி தன்பொருட்டில்லை என்க; ஆதலால் முதல்கேள்வி அவ்வளவுமணம்பெற்றிலது. ஆயினும் அவனுக்கு ஐந்துபூதங்களால் அமைந்தசரீரம் இல்லை. உலகமெல்லாம் அவன் சரீரமாயினும் அக்கினிமுதலிய சுத்தவஸ்துக்களின்கண் விசேஷமாய் ஆவிர்ப்பவிப்பான். ஆதலாற்றான் வேதம் அவருக்கு ரூபம் அமைத்தது,, என்ற விடையை யறிந்தொழிக.

இனி இரண்டாம் கேள்வியைச் சற்று ஆராய்வோம்; "வேதத்தில் கடவுளுக்கு கல்முதலியவற்றால் ஓர் பிம்பத்தையமைத்து ஆராதிக்கும்படி விதிகள் உளவா? இலவா? இருப்பின்நான்குவேதங்களின் சங்கிதைகளிலுள்ள மந்திரங்களால்காட்டவேண்டும்; கடவுளுக்குப் பிரிய்பம் அமைப்பது மனிதனைப் போன்றேசெயல்வேண்டுமா? அல்லது வேறுவிதம்அமைத்தலும்தகுமோ? ஈசுவரனுக்கு எவ்வளவுஅவயவங்களுண்டு?,, என்பது இரண்டாம் கேள்வி. இதில்பெறப்படும் கருத்திது: வேதங்களில் ஈசுவரனைக்கல்முதலியவற்றால் பிம்பங்களையமைத்து அவற்றில் ஆவாகித்துப் பூசிக்கவிதியில்லை. இனி வேதமென்று இச்சமாஜத்தார் நம்பும் மந்திரங்களினும் வேறானவிடம் இருந்தால் அதுவிஷயத்தில் அவர்களுக்கு நம்பிக்கையில்லை. இனி எங்கே இருந்தபோதிலும் அநேகமாய் மனிதனைப் போல் கைகால் அமைந்த உருவம் செய்கிறார்களே இதற்குப்பிரமாணமேது? கடவுளுக்கு வேதங்களில் எங்கேனும் மனிதனிசுகுள்ள கைகால்முதலிய அவயவங்கள் இருப்பதாக எழுதப்பட்டிருக்கின்றனவா? மாறுகோளாய் "[illegible]

[illegible]

[illegible] 𑌗𑍍𑌰𑌹𑍀𑌤𑌾 𑌪𑌶𑍍𑌯𑌤𑍍𑌯𑌚𑌕𑍍𑌷𑍁𑌃 𑌸 𑌶𑍃𑌣𑍋𑌤𑍍𑌯𑌕𑌰𑍍𑌣𑌃" அபாணிபாதோஜவனோக்ருஹீதாபச்யத்திய[illegible]க்ஷுஸ்ஸ சருணோத்தியகர்ணஃ,, பொருள் (கைகாலில்லாதவன் வேகமுள்ளவன் கவரும் தன்மைபெற்றவன், கண்ணில்லாது காண்பவன், காதில்லாதுகேட்பவன் என்பது. "𑌨 𑌤𑌸𑍍𑌯 𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌕𑌰𑌣𑌂 𑌚 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇" நதஸ்யகாரியம்காரணஞ்சவித்தியதேவிபும் அவருக்குக் காரியமுமில்லை காரணமுமில்லை,, "𑌚𑌿𑌦𑌾𑌨𑌨𑍍𑌦𑌮𑌰𑍂𑌪𑌮𑌦𑍍𑌵𑌯𑌂" "சிதானந்தமரூபமத்துவயம்,, வியாபன், சித்து ஆனந்தன், ரூபமற்றவன், அத்துவிதன்,, என்பதாதிவசனங்களால அவனுக்கு ரூபமில்லையென்றே விளங்குகின்றது என்பதே. இதைஇவ்விதம் மறுக்க.

வரும்.

ஸம்ஸ்கிருதபாஷை.

வியாகரணம்

தொடர்ப.

அதுமுதல் இத்தேசத்தவர் அம்மகாபாஷியத்தைப் படித்துக்கொண்டே வந்தார்கள். அவ்விஷயத்தில் தென்னாட்டில்இவ்விதம் சரித்திரம் சொல்லுகிறார்கள்:—ஸ்ரீபதஞ்சலிமாமுனிவர் எழுதியபாஷியத்தைப்படித்தசிஷ்யர் ஒருவரே இருந்தார். மீண்டும் அந்தபாஷியம் உலகத்தில் லோபிக்காது விருத்தியடையவேண்டி அந்தயோகியாகிய பதஞ்சலியே சந்திரகுப்தன் என்கிற பிராமணவடிவாய் பூமியில்வந்து அப்பதஞ்சலி சிஷ்யரிடம் புத்தகம்படித்து தமது சிஷ்யர் அநேகருக்குக் கற்பித்தார். அங்கு அவர் நான்குவருணங்களிலும நான்கு மங்கைகளை மணம்புரிந்து அவர்களிடம் முறையே வாருசி, விக்கிரமாதித்திய, பட்டி, பருத்திருஹரி என நான்குபிள்ளைகளைப் பெற்றெடுத்தார். அவர்களுள முதல்வருணத்துப் பிள்ளைகள் மூவரும் நான்காம்வருணத்துப்பிள்ளையாகிய "பருத்திருஹரி,, என்பவருக்குவேதாங்கமாகிய வியாகரண மகாபாஷியத்தைச் சொல்லக்கூடாது என்றுரைக்க, அதைக்கேட்டு அவர்கள் தகப்பன், தனக்கு அப்பருத்திருகரியினிடம் இருந்த அன்பினாலும் அவர்குணங்களின் மேன்மையாலும்மற்ற மூவரையும் வஞ்சித்து நான்காவது குமாரனுக்குப் பாடம்சொன்னார். சொன்னவழி யாவது: தான் உட்காரும் பலகைக்குக் கீழே ஓர்சுரங்கம் செய்து அச்சுரங்கத்தில் முன்னே புகுந்து பருத்திருஹரி இருக்க, இவர்மேலேஇருந்து பாடம்சொல்வது;உள்ளேயிருந்து அவர்கேட்பது. எவ்விடத்தில்அவருக்குச் சம்சயம் வருமோ அப்பொழுது அவர் அடியில் கட்டப்பட்ட ஓர்கயிற்றால்ஓர் அடையாளம்செய்வதும், அதையறிந்து அச்சமயம்வரும் வாக்கியத்தை நன்குவிளங்கபலமுறை சொல்வதும் ஏற்பாடு. இவ்விதம் படித்து வலிமைபெற்ற பருத்திருஹரி அப்பாஷியத்தில் வெகுவாய்அரியபொருள்களையெல்லாம் அறிந்து வெளிவந்தார். பிறகு உலகத்தாருக்கு உபகாரமாய் தாம் அறிந்த அரும் பொருட்களையடக்கி, "தயிரைக்கடைந்து வெண்ணையெடுத்ததுபோல,, அப்பாஷியத்தின் சாரம்சங்களைஎடுத்துவாக்கியதீபயம் எனப்பெயரிட்டு ஓர்புத்தகத்தை இயற்றிவைத்தார். அதில் ஒன்று வாக்கியகாண்டமென்றும், மற்றொன்று பதகாண்டமென்றும் சொல்லப்படும்

[illegible] “𑌅𑌨𑌾𑌦𑌿𑌨𑌿𑌧𑌨𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌶𑌬𑍍𑌦𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌯𑌦𑌕𑍍𑌷𑌰𑌮𑍍॥ 𑌵𑌿𑌵𑌰𑍍𑌤𑌤𑍇𑌽𑌰𑍍𑌥𑌭𑌾𑌵𑍇𑌨 𑌪𑍍𑌰𑌕𑍍𑌰𑌿𑌯𑌾 𑌜𑌗𑌤𑍋 𑌯𑌤𑌃॥” [illegible]

[illegible]

[illegible]

[illegible]

அப்பக்கத்தின்கண் வாக்கியம் என்பது இத்தன்மைபெற்றது என்றும், அதில் பதங்கள் [அதாவது சொற்கள்) இவ்வகையாய்க் கலந்து நிற்கின்றனவென்றும், அவ்வச்சொற்களின் முன்பின் நிலைமைகள் இன்னின்னவையென்றும், யோகிகள் அறியத்தக்கதும் யோகசாத்திர மூலாசாரியரான பதஞ்சலிமாமுனிவரால் கண்டுபிடிக்கப்பட்டதுமான ‘பரை, பச்சியந்தி, மத்திமை, வைகரீ,, என நான்குவகைப்பட்ட சொற்களின் உட்பிரிவுகளும், சத்தப்பிரமம் இன்னதென்பதும் நாதத்தைதியானிக்கும் வழியும், சொல்வேற்றுமை பொருள் வேற்றுமையும் அவைகளுக்குள்ள சம்பந்தமும், அதனால் உண்டாகும் தோற்றம் இத்தன்மைத்து என்பதும் விளக்கப்படுகின்றது. உலகத்தில் எந்த அறிஞரேனும் மாபாடியத்தைஇவ்வாக்கியபதீயப்பயிற்சியின்றிப் பொருட்படுத்தல் அமையாது. ஆதலிற்றான் கையடர் முதலிய மூன்றாசிரியர்கள் “மகாபாஷியக்கடல்கடந்து உண்மையறிதல் எமனுக்கும் அசாத்தியம்,, என்று முன்சொல்லி “ஆயினும் பருத்திருஹரி என்பவர் கட்டிவைக்க சணைவழி சென்றுநின்றால் காணலாம்,, என்றனர். அங்ஙனமே ஸ்ரீபட்டோஜி தீக்ஷிதரவர்களும் சப்தகௌஸ்துபம் என்னும் புத்தகத்தில் முகவுரையிற்றானே இந்நூலாசாரியரான நம்முனிகளை வணங்குமிடத்து, ஸ்ரீபருத்திருஹரியையும் வணங்கினர் எனக்கொள்க. அப்பருத்திருஹரி எழுதிய வாக்கியபதீயத்திற்குஉரைசெய்தவர்கள் ஹேலாராஜர் புஞ்சராஜர் எனஇருவர். இம்மகான் இவ்வாக்கியபதீயம் என்பதைமட்டில் இயற்றி ஒழிந்தாரில்லை. நீதிஸ்ரீங்காரவைராக்கியங்களடங்கிய ஸுபாஷிதம் என்னும் புத்தகம் முதலிய பலபுத்தகங்களையும் எழுதினர். அவர் எழுதியபுத்தகங்களைப் பார்க்குங்கால் இவர் அத்துவித சித்தாந்தத்தைக் கொண்டவர் என்றும் ஸகுணத்தில் பரமபதியாகிய பசுபதியின் அடியார்களில் ஒருவர் என்றும் வெளியாகிறது. எவ்விதமெனில், வாக்கியபதீயத்தில் துவக்கும்போதே ‘𑌅𑌨𑌾𑌦𑌿𑌨𑌿𑌧𑌨𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌶𑌬𑍍𑌦𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌯𑌦𑌕𑍍𑌷𑌰𑌮𑍍॥ 𑌵𑌿𑌵𑌰𑍍𑌤𑌤𑍇𑌽𑌰𑍍𑌥𑌭𑌾𑌵𑍇𑌨 𑌪𑍍𑌰𑌕𑍍𑌰𑌿𑌯𑌾 𑌜𑌗𑌤𑍋 𑌯𑌤𑌃।’ அதாவது (ஆதிநடுவந்தமிலாத சதத தத்துவரூபமாய் உள்ளவத்துஉலகவஸ்துக்களாய் விவர்த்திக்கின்றது] என்பது,, என்றும் அவ்விதம் ஸுபாஷித புஸ்தகத்தில் உலகத்தின் பதியாகிய பரசிவபிரானிடத்தும் உலகத்தின் அந்தர்யாமியாகிய விட்டுணுவிடத்தும் எமக்குவேற்றுமையில்லையேனும் எமதுபற்று பரமபதியாய அப்பசுபதியானிடத்தே,, என்றும் எடுத்துரைத்தமையால் என்க. அவர் எழுதிய சுபாஷிதத்தில் உள்ள செய்யுட்கள்பல, பின்வந்தகவிகளான விசாகதத்தன் ஸ்ரீகிருஷ்ணமிச்சிரன்முதலியவரால் எடுத்துத் தமது காவியங்களான ‘முத்திராராக்ஷஸம், பிரபோதசந்திரோதயம் முதலிய கிரந்தங்களில் சேர்க்கப்பட்டன. வாக்கியபதியமோ முற்றிலும் வடநாடுகளில் அகப்படுகின்றன. மற்றைய கிரந்தங்களையும் அவைகள் உண்டான காலங்களையும் அதின் விசேஷங்களையும் பின்வரைவாம்.

கடவுள்.

தொடர்பு.

மற்றொருகேள்வி “அஃது விதியாகாதோ?,, என்பது. இவ்விதக்கேள்வியின் கருத்து: உலகத்தில் காலத்தாலல்லது இயற்கையால் ஒன்றும் உண்டாகுவதுமில்லை; பெருகுவதுமில்லை

[illegible]

உயிர்களுக்கெனவன்றோ உலகம் ஏற்பட்ட[illegible]; அவற்றுள் ஒரு ஜீவனுக்கே ஒன்று போக்கியம் என்ப[illegible]வ. உயிர்கள் பற்பலவேற்றுமை பெற்றவைகள். அவ்[illegible]ட்களை அவரவர்களே உபயோகித்துக்கொள்ளுகிறார்கள். உல[illegible]தில் உயிர்களின் உள்ளத்தில் வேற்றுமைதான் வத்துக்கள் ப[illegible]வாய்த் தோன்றுகின்றன. எந்தவத்து சுகம் என்றுதல், துக்கம் என்றுதல் துணிதல்கூடாது. உதாரணமாக; உலகத்தில ஓர் வத்து விழித்துவிளையாடுமுயிர்க்கு சுகத்தையாதல் துக்கத்தையாதல் கொடுக்கின்றது. அதே தூங்கிக்கொண்டிருக்கும் மற்றோருயிருக்கு அக்காலம சுகத்தையாதல் துக்கத்தையாதல் கொடுத்திலது. அங்ஙனமே தூங்கும் ஜீவனுக்கு சுகத்தையாதல துக்கத்தையாதல கொடுத்துவரும் சொப்பனஉலகம், விழித்திருப்பவனுக்கு அவைகள் கொடுத்தில. முற்றுறக்கத்தில் [illegible]யங்கிநிற்கும் ஜீவனுக்கு இவ்விருவகை உலகங்களும் சுகத்தையாதல் துக்கத்தையாதல் கொடுப்பதில்லை. ஆகையால் வத்து ஒவ்வொன்றும் இயற்கையால் சுகத்தையாதல் துக்கத்தையாதல் கொடுப்பனவல்ல. உலகெலாம உயிர்களின் கன்மத்திற்கேற்ப சுகமாயாதல் துக்கமாயாதல் தோன்றுமென்பது உண்மை. இனி உலகத்திற்கு மூலகாரணம் பிரகிருதிஎன்பது. அது ஜடம், காலஞ்செல்ல வேறுபாட்டை யடையுமியல்புடைத்து. அப்பிரகிருதி காலத்தால் வேற்றுமைப்படவும் சுகம் அல்லது துக்கம் என ஓர் வகையாய்த் துணியப்படாமலும் நிற்க, அதைத்தனது நல்வினை தீவினைக்கேற்ப உபயோகித்துச் சுகதுக்கங்களை உயிர்கள் பெற்றுவருகின்றன. ஆதலால் உலகத்திற்குக் காரணம் உயிர்களின்விதியே (கன்மமே) என்பது. ஆயின் கடவுள் இருத்தல் அநாவசியகம்; இனி அவரிருப்பினும் உயிர்களுக்கு தனு, கரணம், புவனம், போகம், இவைகளை அமைத்தல் கன்மத்துக்கேற்ப என்றே முடியுமாதலால், அவரை மூலாதாரமாய்ச்சொல்லுதலினும் இவ்விதியையே அங்ஙனஞ் சொல்லலாமென்பது அவரது கருத்து. இதற்குவிடை நீவிர்கூறிய உலகத்தில் ஒருவத்தவும்இயற்கையால்சுகமும் அல்லதுதுக்கமுமல்ல. அதின்மாத்திரையால் உலககாரணம் உயிர்களின் கன்மமே எனச்சாதித்தல் கூடாது; ஏனெனில், 'நியதி, என்பதுகன்மமாகவேனும் பிரகிருதியாகவேனும் இருக்கலாம். ஆயினும இரண்டும் சடவத்துக்களாதலால் உலகத்தைநல்வினை தீவினைகளைப் பகுத்தறிந்து அவ்வவ்விடம் அவ்வவத்துக்களை உபயோகிக்கும் ஆற்றல் அவைகளிலமையா. இனி உலகத்தை அவ்வவ் வுயிர்களின்கண்ணே இருக்கும் நல்வினை தீவினைகளே அவ்வவ்வுயிர்களுக்குச் சுகதுக்கங்களை உண்டாக்கி அதற்கியைய உலகப்பொருட்களை தொழிற்படுத்தும் என்பதும் அமையாது. ஏனெனில், இருவினையென்பது உயிர்களின குணம்; அது உயிர்களைவிட்டகலாது. குணம் குணியைவிட்டுநிற்றல் அமையாதன்றோ? அங்ஙனமாயின் ஓரிடம் உள்ளகுணம் மற்றோரிடத்தில் மற்றொன்றைஉண்டாக்குதல் எவ்வாற்றானுமமையாது. உலகம், குடம் இவற்றின்கண் தோன்றும் நிறம் என்னும் பண்பு படத்தையாதல் அதின்பண்பையாதல் உண்டுபண்ணுமோ? உலகத்தில் எங்கேனும் ஓரிடம் இருக்கும் பண்பு மற்றோரிடம் ஓர்வத்துவையேனும் பண்பையேனும் உண்டாக்குமேல் இதுவுமமையும். இனி இத்தன்மைத்தென அறியக்கூடாத'விதி, உண்டாக்கினதாகச்சொல்லின் அவன் சூன்யவாதியாவானேயன்றி வேறல்ல. உலகம் காரியமேஎன்றும், அஃது ஏதோ ஒருகாரணத்தை அவாவுதல்இன்றியமையாது என்றும் முன்னரே "அதுகாரியமா?,, என்னு

கவயோ வதந்தி காலந்ததாந்யே பரிமுஹ்யமாநா: தேவஸ்யைஷ மஹிமா து லோகே யேநேதம் ப்ராம்யதே ப்ரஹ்மசக்ரம்’ இதி [illegible]. ஸ்வபாவமேகே கவய இத்யுக்த்யா ஸ்வபாவவாதிந: ‘காலந்ததாந்யே பரிமுஹ்யமாநா:’ இத்யுக்த்யா காலகாரணவாதிந: ‘தேவஸ்யைஷ மஹிமா’ இதி [illegible] ‘யேநேதம் ப்ராம்யதே ப்ரஹ்மசக்ரம்’ ; யேந [illegible] ப்ரஹ்மசக்ரம் ப்ரஹ்மாண்ட [illegible] ப்ராம்யதே யதாகாலம் யதாவ்யவஸ்தம் [illegible]

[illegible] இதி.

[illegible]

பத்ரிகா:

[illegible]

[illegible]

ம் சேழ்வியை மறைக்குமிடம் விரித்தே அஃதை அங்கேகாண்க. மற்றொருவர் தற்செயலாலமையாதோ? என்று அவனை றக்க. உலகத்தில்யாம் முன்னில்லாது தே ம் காரியப்பொருள் அனைத்தும ஒவ்வொரு கா த்தோன்றுகிறனவேயன்றி வேறுவிதம் கண த்தில்கண்ட பொருள்களைக்கொண்டு உடங்கெழுந்த கா ள்களை அனுட்டித்தலும் உண்டு. பாருங்கள்! யாம் கண்ட புகை முதலியவற்றைக்கொண்டு யாம் காணாத அப்புகையுடனெழும் தீயை அனுமானிப்போம். அவ்விதம் யாம் பார்க்கும் உலகம் காரியமாதலால், அதைக்கொண்டு காரணம் ஒன்று கற்பித்தல் அவசியம்; இனி காரணம் கடவுள் என்பது ஏற்படவில்லை எனில், அக்காரணப்பொருள் அறிவிலதாயின் காலம் தேசங்கள் கடக்காது உலகம் மாறுவது உசிதமான அறிவுள்ள காரணம்பற்றியே என்று நம்முன்னோர் அறிவிற் சிறந்த அப்பரம்பொருளையே காரணம் என்றார்கள். ஆதலாற்றான் சுவேதாசுவதர உபநிடதத்தில் ‘ஸ்வபாவமேகே கவயோ வதந்தி காலந்ததாந்யே பரிமுஹ்யமாநா: தேவஸ்யைஷ மஹிமா து லோகே யேநேதம் ப்ராம்யதே ப்ரஹ்மசக்ரம்’, என்றிருக்கின்றது. இதன்பொருள்: ‘‘சுபாவமேகேகவயகா,, என்பதால் சுபாவம் ,அதாவது இயற்கை உலககாரணம் என்பவன் புத்திமான் என்றும் ‘‘காலந்ததாந்யோ பரிமுஹ்யமாநா:,, என்பதால் காலகாரணவாதி அவ்வளவு பகுத்தறிவுபெற்றிலன். எனவும் ‘‘தேவஸ்யைஷமஹிமா,, என்பதால் அளவிலாவறிவாய்நிற்கும் பரமனது அம்சமே உலகம் என்றும் ‘‘யேனேதம்பிராம்யதேபிரமசக்கிரம்,, என்பதால் ‘எக்காரணத்தால் யாம் காணும் அகிலாண்டங்களும் இடந்தவறாது சுழன்றுவருகின்றனவோ அதனால் கடவுள் ஒருவன் உண்டென்பதுமே. இதனுட்கருத்திது. சந்திரன் இப்பூமியைச்சுழலுகின்றான்; இப்பூமி சூரியனைச்சுழற்றுகின்றது; சூரியன் கிருத்திகையைச்சுற்றுகின்றான்; ஆதலால் ஒன்றுக்கொன்று பேலாக அமைக்கப்பட்ட (224) புவனங்கள் எனப்படும் அநேகபிரமாண்டங்களை இயக்கும் அப்பராசத்தி பரம்பொருளினது என ஏற்பட்டது. இவ்வுலகங்கள் காலவரம்புகடவாமல் சுழன்றுவருகின்றமையால் இவைகளை இயக்க ஓர் பெரும் ஆற்றலவசியம். உதாரணமாக, பூமியின் சக்தி அதிலுள்ளமரம் முதலியவற்றையும் அதில் சம்பந்தப்படாத சந்திரன் முதலியவற்றையும் இயக்குகின்றது. இப்பூமண்டலம் முதலிய பல அண்டங்களை இயக்குவது சூரியன். இவ்வளவுபரிவாரத்துடன் கூடிய சூரியனை இயக்குவது ஒன்று; அதை ஆகருஷிப்பது மற்றொன்று. இவ்விதம் ஒன்றில ஒன்றுபருத்து வியாபித்து நிற்கும் ஆற்றல்கள் ஆயின் இவற்றுள் எல்லாவற்றிற்கும் மேலான ஆற்றலே அப்பரம்பொருளின் ஆற்றல் என்க; ஆதலால் விதியேனும் தற்செயலேனும் உலககாரணமாகாது. சர்வசக்தியமைந்த கடவுளே காரணப்பொருள் க; மற்றதுவரும்.

கடிதங்கள்

தத்திற்குப் பத்திராதிபர் பாத்தியரல்லர்.

தமகரிஷி வம்சம்

யோர்காள்!!

தலவதரித்த மூதறிஞரான மகரிஷி க்கமாய் அறிவது அருமையாயிற்று,

[illegible]

அவர்கள் திவ்வியசரித்திரங்கள
பந்தங்களிறருன் காணப்படுகிற
ருமை ஒளிர்ந்துவருகிறது. அ
புதங்களோடு மனித்ததன்மை
அறியவேண்டியது இன்றியமை
கமுண்டு. அவர்கள் திவ்வியப்
ந்தைகள் மனதை வீணில் மற்
அற்புதங்கள் கவருகின்றன.
ய ஆதிகாலத்து மகரிஷிகளின்
த்ம முதலிய பிரபந்தங்களில்
எமது ஆசிரியர்கள் உபதேசித்
ண்ணறிவுக்கெட்டினவோ அவ்
யல்வாம்.

அம்மகரிஷிகளுள் பெருவ
பதின்மர். அவர்கள் பிரமட
மரீசி, பிருகு, அங்கிரஸ், புல
அத்திரி, வசிஷ்டர் என்பன.
ரரான பிரகு மகரிஷியின் வம்
துரைக்கமுயன்றும். மற்றவ
த்துரைப்பாம். அப்பிருகு மக
ருபெண்ணும் உண்டென்றும்
களில் ஒருவர் சுக்கிரன் மற்ற
சரித்திரத்தை ஒருவாறுகாட்டு
திரம்வரும்.

ஸ்ரீசதுர்முகப்பிரமனுக்கு
பொழுது அங்கிருந்த அகின
மகரிஷி. அவரைபிரமபுத்திரர்
சொல்வதுண்டு. அவரது பத்
ள் தக்கன் மகள். அவ்விருவரு
து ஆச்சிரமத்தின்கண்ணே ந
க்க, அப் புலோமை என்னும்
ள். ஒருக்கால் அம்முனி ஸ்நா
மதருணத்தில், புலோமன்
மத்திற் புகுந்தான். அவளைக
பெரியவண வந்தானென்று அ
அவ்வசுரன் இவளை அபகரித்த
உதயகாலத்தில் அருகிலிருந்த
ப்பார்த்து அவரை நோக்கி,
ரியை எ

ளிற்சிலவிடங்களின்சிற்சில பிர
து. அதுகொண்டே. அவர்பெ
வர்கள்சரித்திரங்களோ அறியற்
யைக்கடந்தன. அதைநமமவர்
மயாது. அறிவதால் பயன் அ
பெருமையை அறியாத நம்மு
லவர்எழுதிய புத்தகத்திலுள்ள
ஆதலால மரீசி, பிரகு முதலி
சரித்தி ங்கள் எவ்வளவு பார
கிடைக்கின்றனவோ, எவ்வளவு
தனரோ, எவ்வளது எமது நு
ளவு இவ்வ ம் எடுத்து எழுத

மதாங்கிய ஆதிமகரிஷிகள் ஒன்
புத்திரர். அவர்கள் பெயர்கள்
ஸ்தியர், புலகர், கிரது, தக்கன்
அவர்களுள் இரண்டாவதுகுமா
சசரித்திரத்தை ஒருவாறு எடுத்
சரித்திரத்தை மற்றவிடம் எடு
ரிஷிக்கு இரண்டுபிள்ளைகளும் ஒ
சொல்லப்படுகிறது. அப்பிள்ளை
வர் சியவனர் இங்கு சியவனரின்
வாம். மறுபடி சுக்கிரன் சரித்

வருணபகவான் யாகம்செய்யும்
பின்கண்ணை உதித்தவர் பிரகு
என்றும் வருணபுத்திரர் என்றும்
னி புலோமை என்பவள். அவ
தவருமல் இல்லறத்தைத் தம
டாத்திவந்தார்கள். இங்ஙனமிரு
முனிமனைவி சருப்பவதியாயினு
ரம்செய்ய வெளியிற்போயிருக்கு
என்னும் ஓர் அசுரன் அவர்ஆசிர
கண்ட அவ்வம்மை ஏதோ ஒரு
ஷனுக்கு உபசாரம்செய்தன
க கொண்டுபோக உத்தே
அக்கினி நன்றாய்ப்பிரகாசிப்
க்கினிபகவானே! இன்ன
ரக்கென வரித்தேன்; அ
வகையால் அ

[illegible]

மூர்ச்சைதெளிவித்துக்குழந்தையுடன் வீட்டிற்கனுப்பினர். அ
வள் தன் மாமனிடம விடைபெற்று ஆச்சிரமத்தைநோக்கிக் கு
ழந்தையுடன் செல்லும்பொழுது, நடுவில் அவள் சுற்றி அழுதகண்
ணீர் சொரிந்தவிடம் ஓர்நதியாயிற்று. அதைப் பிரமதேவன் வ
தூசரை என நாமமழைத்தார். (மருமகள் சென்றவழிநின்றது என்ப
து கருத்து) பிறகு இவளை இவ்விதத் திருக்கோலத்தில் பிருகும
கரிஷி கண்டார். உடனே கோபம்மீண்டு பெண்ணே! நீதான்
என் மனைவியென்று அவ்வசுரனுக்குச்சொன்னது யார்? என்று
வினவினர். உடனே அம்மங்கை "யான் என் சொல்வேன் அக்
கினிபகவான் தான் சொன்னார்; அவரோ கருணையின்றி என
னைக் களவுசெய்தான்: தபது அம்சம் என்னிடமிருந்ததால் அ
வன்மாளவும் நான்மீளவும் ஏற்பட்டது என்று மொழிந்தாள். உ
டனே பிருகுமகருஷி கடுங்கோபங்கொண்டு அக்கினியைநோக்கி
நீ எல்லாவற்றையுந்தின்பாய் என்று சபித்தார். உடனே அக்
கினிபகவான் இவரைநோக்கி ஓ மகரிஷியே! "நீர் செய்தது மு
ற்றிலும் தப்பிதம்; நான்சொன்னதுண்மை; உலகத்தில் எல்
லாம அறிந்து பாவம் இன்னது புண்ணியம் இன்னது என்
பகுத்தறிவுள்ளவர் எக்காலமேனும் பொய்யைச்சொல்வாரோ?
பொய்சொன்னவன் புண்ணியலோகங்களைப் பெறுவானோ? பொ
ய்யினும் வேறான பெரியபாவம் உண்டா? உலகத்தில் பொய்யை
விட்டு மெய்யைத் தழுவிநிற்றலால் அல்லவோ, என்னிடம்
தவிதிவழுவாது மந்திரங்களோதிய மகான்கள் எல்லோரும்
வர்கள் பிதுர்க்கள் மற்றவர் இவர்களை உத்தேசித்து ஹவிசை
ஓமம்செய்கிறார்கள் நான் உமதுசாபத்திற்குப் பதில்சாபமளி
க்கவலிமைபெற்றிருப்பினும் நீவிர் பிராமணராகையால், எ
கு மிகக்கவுரபுத்திககிடம் என்று விசுவாசித்து ஒழிந்தேன்
நீவிர் செய்தவிஷயம் மிகவெறுக்கத்தக்கது; என் முகத்தால
லவோ இனிசர்வகருமங்கள் நடக்கவேண்டும்; பார்ப்போமெ
ன்று தனது அம்சமாகிய தேயுவை எங்குங்குன்றும்படிசெய்தா
அதேகாலத்தில் உலகத்தில் எங்கும் கிரியைகள் ஒன்றும் நட
க்கவில்லை; யாகங்களில்லை; பாகங்களில்லை; இரவில் ஒளிப்பிர
சிக்கவில்லை; உலகமே நிலைமாறி திண்டாட்டங்கொண்டது; எ
ரும் துயரமுற்றார்கள். உடனே பெரியோர் எல்லோரும் கூ
தேவர்களிடம் கதறினர்கள். "ஐயையோ!! வேறு கதியில்
யே; உலகம் ஒழிந்தகாரணம் அறியோம்; காலஞ்செல்வது எ
னமென்று கூச்சலிட்டார்கள். உடனே தேவர்கள் எல்லோ
ருங்கூடி உலகத்தைப் படைத்த சதுர்முகனிடம் சென்றார்க
அவர் குமாரர் அக்கினிக்களித்த சாபத்தையும் பகர்ந்தனர்க
உலகத்தில் அக்கினி இன்மையாலுண்டாகுங்குற்றங்களையும்
ர்த்தையையுங்கண்ணுற்று, வெகுசௌரவமாய் அக்கினிதேவ
த்து "ஓ அக்கினி! நீ இவ்விதஞ்செயலாகாது; நீ
ீ இல்லாத உலகம் வாழ்வதெங்ஙனம்? நீயே
கவேண்டும்; ஆதல்பற்றி நீ சினங்கொ
. சாப மூனக்கு ஒன்றுன ச
ண்ணியசரீரங்களிரண்டினுள்
பியசரீரத்தால் அச்சாபத்தை ய
, என்றனர். இனி சூரியசந்திர
பநேசவந்துக்கள் சுசியாவது பே
த்திலும் உனது காந்தி பட்டமாத
அவர்சாபத்தையும் நீ மறக்கவே
யாகாதி முதலான கிரியைகளும் நட

[illegible]

[illegible]

𑌅𑌯𑌂 𑌚𑌿𑌦𑌮𑍍𑌬𑌰𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌵𑌾𑌸𑍀.

𑌵𑌿. 𑌶𑍍𑌰𑍀𑌨𑌿𑌵𑌾𑌸𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌃.

𑌚𑌰𑌿𑌤𑍍𑌰𑌾𑌧𑍍𑌯𑌯𑌨𑌮𑍍

𑌬𑍌𑌦𑍍𑌧𑌮𑌤𑌮𑍍

[𑌅𑌨𑍁𑌵𑌾𑌦𑌃]

[illegible]

வேண்டும்,, என்று அப்பரமேட்டி கூறிய விஷயங்களனைத்தையும் அக்னிதேவன் செவியுற்று அங்ஙனமே என்றொப்பினார். பிறகு மறையவர் எல்லோரும் மகிழ்ந்தார்கள். மற்றவர் சரித்திரம் பிறிதோரிடம் வரும்.

(மொழிபெயர்ப்பு) சிதம்பரம்

ஸ்ரீநிவாசாசாரியார்.

சரித்திரப் பயிற்சி.

பௌத்தமதம்

(தொடர்பு)

இந்தப்புத்தனால் உண்டாக்கப்பட்ட கா[illegible]ணத்தினால் பௌத்தமெனும் பெயர்கொண்ட இம்மதத்தை உண்டுபண்ணினவன் இறந்தபோதிலும், உலகம் முழுமையும் மேன்மேலும் பரவக்கிளம்பிற்று. ஏனென்றால், அவனால் அனேகவாறான யுக்திவாதங்களால் ஸ்தாபிக்கப்பட்டபடியாலும், பெயர்பெற்ற மன்னர்கள் மனதில் அசையாமலூன்றியபடியாலும் ஆரியதேசத்தில் எவ்விடத்திலும் பிரசரித்தது இருந்தும், சர்வோத்கிருஷ்டமானவும், தன்னுடைய சமர்த்தியத்தினால் ''மாக்ஸ் முல்லர்,, முதலாகிய ஐரோப்பிய பண்டிதர்களுக்கும் இதிலது வபுதத்தின் முன்னுக்குப்பின் விரோதத்தை நிரூபிக்க இடம்போன்ற பிராம்மணமதமிருக்குங்காலத்திலும், கூர்மைபுத்தியுள்ளவரும் எல்லாக்கலைகளிலும் பாண்டித்தியமடைந்த வித்வான்களிருக்குங்காலத்திலும், ஈசுவரனின்மையைச்சித்தாந்தமாய்க்கொண்ட இந்தமதமேவாய்ப்பரவினது யோஜிமால முடிவுக்கு வருகின்றவர்களுக்கு ஆச்சரியத்தையே உண்டாக்கத்தக்கது. ஆயினும் எப்பணியேனும் எம்மதமேனும் ஒரு பிரபந்தமாயினும் பிரஸ்தியையடையவேண்டுமாயின், இவைகளைக்குறித்து சபைகள் தீர்மானம் பண்ணவேண்டும். இந்த விஷயங்களைக்குறித்தே பத்திரிகைகள் பிரகடனப்பண்ணவேண்டும். இவைகளுக்காக நேரில் பிரசங்கங்கள் செய்யவேண்டும். இவைகளுக்காக தொழில், ஆஸ்தி இவைகளைப்பாராட்டாமல் எல்லோர்களுக்கும் அதிகாரம்கொடுப்பதென்பதே. இவைகளும் தங்கள்மதத்தை முன்னுக்குக்கொண்டுவருவதற்காகச்செய்யவேண்டிய மற்றைய விஷயங்களும் இப்பௌத்தர்களால் நடத்தப்பட்டது. நம்மவர்களோவென்றால்! எக்காலத்திலும் எத்தேசத்திலும் உசிதமான காரியங்களைச்செய்யத்தெரியாமல் சிலர் உதாசீனத்தினாலும், சிலர் தங்கள் அனுஷ்டானங்களையே பாராட்டுவதாலும், சிலருக்குத் தேசாபிமானமென்பதே இன்மையாலும், சி[illegible]ங்கள் வயிற்றுப்பாட்டுக் கவலையாலும், அரசன் ராமனா[illegible]ன்ன, இராவணனானாலென்ன, மதம் பாதாளத்தில் அழுந்தி[illegible]யானாலென்ன, தேவலோகத்தையடைந்தாலென்ன, அ[illegible]ப்பற்றி விசாரிப்பதினால் நமக்கு யாதொருலாபமுமில்லையெ[illegible]ற மோசமான எண்ணத்தினால் வஞ்சிக்கப்பட்டவர்களாய் [illegible]திகள் செய்யும் எல்லா தௌஷ்டியத்தையும் தலைகுனிவு[illegible] பொறுக்கிறார்கள். ஆகையால்தான் இப்பொழுது கிறிஸ்[illegible]ர்கள்செய்வதுபோலவும், இதற்குமுன்பாக மகம்மதியர்கள் செய்ததுபோலவும், நாஸ்திக சித்தாந்தக்கங்கணங்கட்டிய [illegible]லவாதபடிசெய்த பௌத்தர்களும் சரியான மார்க்கத்தை யனு[illegible]த்துத் தெளிந்தபுத்தியைப்பெ

[illegible]

ற்று சூக்குமதரிசிகளான நம்முன்னோர்

தங்கள் திறமை ஆண்மையுடன் விளக்கப்பட்ட

கள் மகாஜனசபையை எவ்விதமே நடத்தினார்களென்றும், புத்தமதத்தைச்சார்ந்த மன்னர்கள் மதவிடயமான சிரமத்தைச்சிரமமென்று பாராட்டாமல் ஆநந்தத்துடன் முயன்றார்களென்றும் தெரியவருகிறது. நம்மவர்களோ! அப்பொழுதுகூடத்திரடஸ்தர்களாகப் பிரமித்து நின்றார்களென்றால், இதரமதம் பரவுமிக்காலத்திலும் மௌனமே பூஷணமாகக்கொண்டபண்டிதர்கள், மடாதிபதிகள் இவர்கள் சற்றறியும்பொருட்டு எளிதாக ஈண்டெழுதத்துணிந்தாம்.

விக்கிரம சகாப்தத்திற்கு சுமார் 400. வருடங்களுக்கு முன்னர் 'இராஜகிரக,,மென்னும்நகரில் மகாகாசிபன் என்பவனால் ஏற்படுத்தப்பட்டமகாசபையில் புத்தமதவிஷயமாய் வெகுவாக முயன்றார்கள். மீண்டும் 'விசாலை, எனப்பெயர்கொண்ட ஓர் நகரில் 700. சபையார்களடங்கியதும் முன்னிலும் பெரியதுமான ஓர்சபை கூட்டப்பட்டது. வெகுகாலம்கடந்தபின்னர் நம்மதத்தை நசிக்கச்செய்ய சோகம் கொடுப்பட்டவனான் அசோகனென்னும் ஓர் புத்தவரசனால் ஸ்தாபிக்கப்பட்ட 1,000. கோஷ்டியர்களோடுகூடியதாய் ஒருசபை, இந்தியாதேசத்தவர்களால வெகுவிந்தையுடன் நோக்கப்பட்டு வெகுகாலமிருந்தது. இவ்வசோகன் இக்காலத்திய புத்தர்களால் முதலாசிரியனாகவும், இரண்டாவது புத்தனாகவும், தெய்வமாகவும் பூஜிக்கப்பட்டு வருகிறான். சீனா, பாக்த்திரியா இத்தேசங்களின் சரித்திரக்காரர்கள் இவனுடைய காரியங்களைச்சிலாகித்து இவனையேநாயகனாக்கொண்டு பிரபந்தங்களை யெழுதினார்கள். மாகதிபாஷையில் (Pali)எழுதப்பட்டுள்ள சரித்திரமூலமாயும், ஸம்ஸ்கிருதத்தில் இவ்விந்திய கவிகளினால் செய்யப்பட்டுள்ள நாடகமூலமாயும், பிரசத்கதை முதலான பிரபந்தங்கள் வாயிலாகவும் இவ்வாரியவர்த்தத்தில் ஆங்காங்குள்ள சிலாலிகிதங்கள் வாயிலாகவும் அசோகன் சரித்திரம் சிலது புலப்படுகின்றது. அதைச்சுருக்கமாயிற்றைக்கெடுத்துரைப்பாம்.

குருக்ஷேத்திரயுத்தகாலத்திலேயும், மகதராச்சியம் சாலவும் உயர்ந்தபதவியை அடைந்திருந்தது. அப்பொழுதுஸகதேவனென்பவன் ஒருவன் மகததேசத்திற்கதிபதியாயிருந்தான். இவ்வரசனுக்குப்பிறகு அநேகவருடங்கள்சென்றபின்னர் தாக்ஷகர்கள் மகததேசத்திற்கதிபதிகளானார்கள். இவர்கள் காலத்திற்றான், க்ரீக் தேசத்திய அரசனான 'அலக்ஸாந்தர், என்கிற ஓர் பெரியவீரன் பெருகியசேனையுடன் உத்தரதேசத்திற்குவந்து அநேகம் அரசர்களை ஜெயித்து அவர்களிடத்திலிருந்து பட்டத்தைப்பிடுங்கி மற்றைவர்களை இவர்களுக்குப் பதிலாய் நியமித்தான். மகததேசத்திய பூர்வவம்சமும் ஜெயிக்கப்பட்டு அனேகம்வருஷங்கள் கடந்தபிறகு நந்தனென்பவன் இத்தேசத்திற்கு அரசனாய்வந்தான். இவ்வரசனைத்தலைவனாய்க்கொண்ட இந்தவம்சம் மகதஇராச்சியத்தில் ஆண்டுகொண்டு வரும் காலத்தில் மௌரியராஜவம்சத்திற்கு மூலபுருடனான சந்திரகுப்தனென்று பெயர்கொண்ட பிரசித்தமான அரசனொருவன் இந்தராச்சியமுழுமையும் தன்வசப்படுத்திக்கொண்டான். விக்கிரமசகாப்தத்திற்கு 300- வருடங்களுக்கு முன்பாக மன்னனானான். சந்திரகுப்தனும் இவன் மகனும் பௌத்தமதத்தைநிராகரணம்பண்ணி விதிவிகிதமாய் இருக்கின்ற பிராம்மணத்தைக்குறித்தே பிரயத்தனப்பட்டார்

[illegible]

லிய காவியப்பிரபந்தங்களிம் காணப்படுகின்றது, இந்த விஷயத்தில சந்தேசத்திற்கிடமில்லை. ஏனென்றால் நந்தவம்சத்தாருடைய பக்ஷத்திலிருந்து வஞ்சனையாய் சந்திரகுப்தனிடத்தில் சேருமபடி செய்யப்பட்ட இராக்ஷஸன் என்பவனும், சந்திரகுப்தனுடைய அதிருஷ்டத்தினாலும் பாக்கியவசத்தாலும் அவனுக்குக் கிடைத்த சாணக்கியனும் பிராம்மணர்களாகவேயிருந்தார்கள். பிராம்மணர்களைச் சேர்ந்த சிலபண்டிதர்களும் கவிகளும் பாடலீபுரம் என்னும் நகரில் சபையார்களாயிருந்தார்கள்

வாசர்.

கோபுசெட்டிபாளையம் வாலிபர்கள்சபையில் சுப்பிரமணியசாஸ்திரிகளவர்களால் செய்யப்பட்ட உபந்நியாசம்.

நண்பர்களே!! இன்றுபந்நியாசத்தில் என்னால் சொல்லப்படும் விஷயங்களாவன:

(க) ப்ரம்மம் என்றவஸ்து ஒன்றுண்டென்பது.
(உ) வியாவகாரிகதசையில் ஈசுவரர் ஒருவர் உண்டென்பது.
(ங) ஷை ஈசுவரரால் செய்யப்பட்ட ஜகத்சிருஷ்டி.
(ச) வேதபுராணங்களின் பிரிவுகளும உபயோகமும்.
(ரு) பிராம்மணாதி 4 வர்ணங்களும் அவர்கள் செய்யவேண்டிய வைதீககர்மங்களும்.
(சா) மதவிஷயங்களின் கற்பனைகள்.
(எ) லௌகிகவிஷயங்களும் தற்காலத்து பிராமணர்களின் நிலைமைகளும்.

ஷை 7-விஷயங்களைப் பற்றியும் நான் கூடியவரையில் சொல்லப்போகிறேன். ஆனால் வேதசாஸ்திரங்கட்கு முடிவில்லை; அவைகளில் அறியக்கூடியபாகங்களோ வெகுவாயுண்டு; அவ்வளவையும் அறியலாமென்றால் நமது வாழ்நாட்கள் வெகுசொல்பமாயிருக்கின்றன. ஆயினும் அவற்றுள் சிலவிஷயங்களைமாத்திரம் சொல்லுகிறேன். அவைகளில் ஏதாவது பிழைகள்இருக்கும் பக்ஷத்தில் அவற்றைவிட்டுவிட்டுக் குணமுள்ளவைகளைமாத்திரம் கிரகிக்குமாறு சபையாருக்கு மிக்கவர்தனம் செய்கின்றனன்.

1. ப்ரம்மம் என்கிறவஸ்துவானது உண்டென்றுவேதாந்தசாத்திரத்திலும் உபநிஷதுக்களிலும் விசேஷிக்கப்பட்டிருக்கின்றது. அந்த ப்ரம்மம் என்கிற வஸ்துவை பிரகிருதத்தில் அநுமானப் பிரமாணத்தினால் விசாரிக்கும்படி நியாயமிருக்கிறபடியால் அந்த அநுமானப் பிரமாணமானது இரண்டுவிதமென்று சாஸ்திரங்களாலும் பெரியோர்களாலும் நிச்சயிக்கப்பட்டிருக்கின்றது. அவை வருமாறு: அநுமானம், யதார்த்தம், அயதார்த்தம என இரண்டுவிதம்; அவற்றுள் முதன்மையான யதார்த்தஅநுமானத்தினால்தான் வஸ்து சித்திக்கும். இரண்டாவதான அயதார்த்த அநுமானத்தினால் பொருள் சித்திக்காது. எப்படியெனில், பர்வதத்தில் புகை காணப்படுகிறது. அந்தப்புகைமாத்திரம் தூரப்பார்வைக்குந்தெரிகின்றது. அந்தப்புகையில் நெருப்புண்டென்று அறிந்துகொள்ளுகிறோம். இது யதார்த்த அநுமானத்திற்குத் திருட்டாந்தம். தூமாபாஸமாயிருக்கிற பனியினால் நெருப்பினுடைய அநுமான சித்தியாகமாட்டாது. இது அயதார்த்தமான அநுமானத்திற்குத்திருட்டாந்தம். ஆகையால் புகையினால் பர்வதத்தில் அக்கினியிருக்கிறதென்று அநுமானம் எப்படிசித்திக்கிறதோ, அதுபோல இப்பொழுது நம்மாற்காணப்படும் அதிவிசித்திரமாயும் அநேககாட்சிகளடங்கிய இவ்வுலகத்துக்கு மேற்படி பிரம்மமானது பரமகாரணமென்று நிச்சயிக்கவேண்டியதாயிற்று.

வரும்.

சென்னை, இந்துபி
கௌரவமெய
வெங்கடகிரிசாவ
பிரசங்

பாதிரிமார் தங்கள்மதத்தைத்
த்திரம்பிரசங்கஞ்செய்வதில் பாதிரொரு
றன்றி இந்துக்கள் உற் ல் பக
கள்நிறைந்த பெருங இந்துதே
இந்துமதத்தையும் னம்வருந் ா
கிக்கக் கவர்ன்மென் றதென்ற க
ள்செய்துவருகிறார் ஆங்காங் ர
ஸதாபபபட்டு வருகிறார்கள்: கவர்ன்மெண ி
ப்பதில்லை. ஆக்டுக்கு விரோதமாகநடக்கும் து
வதில்லை, இதுபொறுக்காது. இந்துக்கள் கிற த
க்கண்டிக்கப்புறப்பட்டாலோ, போலீசாரிடத்தில் ள்
மதத்தைக் கண்டிக்கின்றார்களென்றும, இகழ்கி ன்
றும் சொல்லி முறையிடுகின்றார்கள். இதனைக்கும் ழி
க்கமாயிக்கின்றது. நிற்க, 1888ஞு நவம்பர்மீ 1 க்
காட்டில் இரதோற்சவத்தில் பதினாயிரம் ஜனங்கள் ல்
சேர்ந்தார்கள்- அன்று பரிசுத்தவிசிஷ்டாத்வைத பரமதகண்டன வேங்கடகிரிசாஸ்திரியாரவர்கள் இந்துமதப்பிரசங்கம் செய்யச்சென்றார்கள். அங்கு அநேகம் பெரியமனுஷியாள் சாஸ்திரியாரவர்களை கல்பாத்தி என்னும் கிராமத்தில் தாபித்திருக்கும் ரீடிங் ரூமுக்கழைத்துக்கொண்டுபோய் இந்துமத விஷயமாய் உபந்நியாசஞ்செய்யக் கேட்டுக்கொண்டார்கள்' அதற்கு கோச்சிதிவான்பேஷகார்ப்ரம்மஸ்ரீசங்கரய்யரவர்க்ள் சபாநாயகராய் எழுந்தருளினார்கள். அன்று மேற்படி சாஸ்திரியரவர்கள் உபந்நியாசஞ்செய்தவிஷயமாவது:—சிரசிலும்சரீரத்திலும் ரோமங்களை வளர்ப்பது நல்லதா? எதேசத்திலும் ஸ்திரீகள மாத்திரம் சிரசில் ரோமம் வளர்ப்பதற்குக் காரணம் யாது? மூகலிபவிஷயங்களாசளடுத்துக்கொண்டு, வானப்பிரஸ்தாச்சிரமிகளுக்கு ஜடையின்றியமையாதென்றும்; நகரங்களில் வசிக்கும் நைட்டிகப் பிரமசாரிக்கும், பரம் அம்ச சந்நியாசிக்கும் ஸதிரீகளுக்கும்சட்டாயம் தலைமயிர் வளர்த்தே தீர வேண்டுமென்றும்; பிரமசாரி கிருஹஸதன் இவ்விருவருக்கும் உபநயநதீக்ஷை, விவாகதீக்ஷை, கெர்ப்பதீக்ஷை, யாகதீக்ஷை மாதரு பிதாருதீக்ஷை இந்துக்களுக்குக் குறித்தகாலம் வரையில் மயிர் வளர்த்தல் ஆவசியகமென்றும், ஐரோப்பியர் மயிரைக்கத்தரிப்பது அனுக்தணையஞ்சரியல்லவென்றும்; பிரமசாரி I5. நாளைக்கொருமுறை சிரசு முதல் கழுத்து வரையிலும், கிருகஸதன் ஒருதடவைச்சர்வாங்கங்களும், குடீசகட்கூதக சந்நியாசிகள் இரண்டு மூன்று மாதங்களுக்கு ஓர்தடவையும் ஹம்ஸனென்னும் சந்நியாசி இஷ்டமுள்ள போதும், க்ஷவரஞ் செய்துகொள்ளவேண்டுமென்றும்; எந்த சந்நியாசிகளும் கழுத்தின்கீழ் க்ஷவரஞ்செய்துகொள்ளக் கூடாதென்றும்; பிரமசாரி, கிருகஸ்தன் இவர்கள் குடுமி, புருவம், கண் இவற்றின்கணுள்ள ரோமத்தையோர்போதும் எடுக்கப்படாதென்றும்;; கிருகஸ்தன் அதுகளோடே முழங்கை முதல் மணிக்கட்டுவரையிலும் முதுகும் விட்டு, ஏனையசர்வாங்கமும் க்ஷவரஞ்செய்துகொள்ள வேண்டுமென்றும் தக்க நியாயாதாரத்தோடு காட்டப்பட்டதாம். இதைக்கேட்ட சபையிலுள்ளார் யாவருஞ்சந்தோஷித்தார்கள். பின்னர் சபாநாயகரவர்கள் எழுந்து, சாஸ்திரியாரவர்களியற்றிய வுபந்நியாசத்தைக் கேட்டு நான் மிக்கசந்தோஷித்தேனென்றும்- அவ்வாறே யிங்குள்ளார் எவருங்கேட்டுச் சந்தோஷித்திருப்பார்களென்றும் சயனஸ் லாஜிக் இவற்றை அநுசரித்து வேதசாஸ்திரங்களுடனொத்த இது போல்பிரசங்கம் இவரிடத்தன்றிக் கேட்பது மிகவுந்துர்லபமென்றும் கூறினார்கள். பின்னர் யாவருங்கரதாளங்கொட்டிச் சாஸ்திரியாரவர்களைத் துதிசெய்தார்கள்.

மறுநாள் அக்கிராமத்தியில் இரதோற்சவத்தில் பாதிரிகள் முப்பதுபேர் பரிவாரஜனங்களுடன் நமது மததூஷணஞ்செய்து பிரசங்கஞ்செய்தார்கள். மேற்படி சாஸ்திரியாரவர்களும் கூடச்சென்ற ஏழுபேரும் கிறஸ்துமதகண்டன பரசுப்பிரசங்கஞ்செய்யவே பிறகு தங்கள் காரியஞ் சித்தியாகவில்லையாதலால் போய்விட்டார்கள். மேற்படி எழுவரில் ஒருவர் மலையாளியும், ஆறுபேர் பிராமணர்களுமாம். அவ்வறுவரில் நான்குபெயர் இஙகிலீஷபடித்தவர்களும, இருவர் ஸமஸ்கிருத வித்துவான்களுமாம். மூன்றாநாள் தேர்த்திருவிழாவில சாஸ்திரியாரவர்களிடம் பாதிரியார் சென்று, ஐயாவே!! தாங்களி [illegible] மதத்தில் குற்றங்கூறுவதில்லையே; அப்படியெ கிறிஸதுமதத்திலுங்குற்றங்கூறுதிருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அதற்குச்சாஸ்திரியார்: எங்களுடைய திருவிழாவில் எங்கள் மதத்தைஸ்தாபித்தும் கிறிஸதுமதத்தைக் கண்டித்தும் பிரசங்கஞ்செய்வோம்; உங்கள்கையாலான மட்டும் எங்கள மதத்தைத்தனடயின்றிக் கண்டிககலாமென்றனர். பாதிரிமார் ஆனால் முப்பதடி தூரநிற்கவேண்டுமென்றார். சாஸதிரியார் அங்ஙனஞ்செய்தனரில்லை. பின்புபாதிரியார், வெள்ளைக்கார இனிஸபெக்டரையும் மகம்மதீப கான்ஸடேபிலையும் கூட்டிவந்து காட்டிக்கொடுக்க, சாஸ்திரியார் இன்ஸபெக்டரை நோக்கி: “நாங்களோ இந்துக்கள்; இவர்களோ கிறிஸதவர்கள்; இக்கிறிஸதவர்கள் எங்களுற்சவத்தில் எங்கள் கோவிலுக்கருகில் பயபக்தியோடு சுவாமியைத் தரிசிக்கவரும் எங்கள் ஜனங்களுக்கு வெட்கமுண்டாகவும்,இரத்தக்கொதிப்புண்டாகவும வாயில்வந்தபடி எங்களுற்சவத்தையும், எங்கள்தெய்வத்தையும், எங்களாசாரிமார்களையும், எங்கள் சாஸதிரங்களையும் ஏன் தூஷிக்கின்றார்கள்? இவர்களுக்கிங்கென்னவேலை? நாங்கள் எங்கள்திருவிழாவில் எங்கள் ஜனங்களைநோக்கி, ஹிதமாயும், நீதியாயும் உலகின் கண்ணுள்ள மதங்களெல்லாவற்றிலும் இந்துமதமேயுயர்ந்ததென்றும், பாதிரிகள்சொல்லும் பொய்மொழிகளைக் கேட்டு மெய்யென்றுநம்பிப் பிரமித்து நமதுமதத்தைவிட்டுக் கிறிஸதுமதத்திற்குப் போகாதீர்களென்றும் உபதேசிக்கிறோமேயன்றி, ஞாயிற்றுக்கிழமையில் பாதிரிகளுடைய கிறிஸதுகோவிலுக் சருகில்போய்நின்று உபதேசிக்கின்றோமா? இல்லையே! ஜனங்கள் கூடுகிறதிக்குகளிலெல்லாம் இவர்கள் பிரசங்கிக்கிற வழக்கமென்றால் மகம்மதியருடைய அல்லாபண்டிகையில் இவர்கள்போய் ஏன் பிரசங்கிப்பதில்லை? இந்துக்கள் சத்தியமும் க்ஷமையும் சௌசன்னியமு முடையவர்களென்றதனாலேயே விளங்குகின்றதல்லவா? களைப் போலீசு உத்தியோகஸ்தர்களாக ஏற்படுத்தி, இந் ளுற்சவகாலத்தி லனுப்பியது பாதிரிகளுக்கு அனுகூல வும் இந்துக்களுக்குப் பிரதிகூ

லஞ்செய்பவுமா? பாதிரிகள் இந்துக்களிடத்து வாதஞ்செய்து வெற்றிபெறச்சகதியில்லாதபோது, உங்களை யிட்டுக்கொண்டுவந்து, எங்களைக்காட்டிக்கொடுக்க, அவர்களுக்கு நீங்கள் சாதகஞ்செய்யவும், இந்துககளுக்குப் பாதகம் புரியவுமா? நிற்க; பாதிரிகள் எங்களுற்சவகாலததில்வந்து செய்யும் தூஷணைப்பிரசங்கத்தால் கலகங்களுக்கு ஆஸ்பதமாகின்றது. அவர்களோ சம்பளததுக்குவந்து பிரசங்கஞ்செய்கின்றார்கள்; நாங்களோ சத்தியமாயும் சமாதானமாயும் இராசபத்தியுடனும் ஆத்மரக்ஷிப்படையவும் பிரசங்கப்புரிகின்றோம்,,இவை முதலாகப் பலவாறாகக் கூறினார்கள். அதன்பின் மேற்படி இன்ஸ்பெக்டர் பாதிரிமாரைப்பார்த்து நீங்கள் இந்து உற்சவத்தில இந்துதேவாலயங்களுக்குச் சமீபத்தில் பிரசங்கிக்ககூடாது; அப்படிச்செய்வீர்களேயானால் உங்களைப்பிடித்துச் சார்ச்செய்வேன்; போங்கள் என்றுசொல்லி, அவர்களையனுப்பிவிட்டு சாஸ்திரியார்முதலியவர்களை நோக்கி, உங்களிஷ்டம்போல பிரசங்கஞ்செய்யுங்கள்,, என்றுகூறி, விடைபெற்றுச் சென்றனர். பிறகு இந்துப்பிரசங்கிகள் மாத்திரம் மறுநாள் சாயரக்ஷைவரையில்பிரசங்கம் புரிந்தார்கள். சாஸ்திரியாரவர்கள் பாதிரிகளைப் பிரசங்கத்தால் வென்றதுடன் பாதிரிகளிட்டுக்கொண்டுவந்த இன்ஸ்பெகடரைக்கொண்டே அவர்களை இந்துவுற்சவகாலத்தில் வரவொட்டாமல் அனுப்பினவிஷயத்திற்காக அங்குள்ளகனவான்கள், சாஸ்திரியாரவர்களை யுபசரிதது புஷ்பமாலைபோட்டு வாத்தியகோஷ்டத்துடன் வெகு மரியாதையாய் அழைத்துக்கொண்டுபோய் ஜாகையில்விட்டார்கள். அங்குவந்தவர்க்கெல்லாம் சந்தனம் புஷ்பம் தாம்பூலம் இவை கொடுக்கப்பட்டன. நடந்தவற்றில் சுருக்கமாயெழுதப்பட்டது.

இந்து நண்பர்களே!!

இவ்விஷயத்தை நீங்கள் வாசிப்பதோடு பிறர்க்கும் வாசிக்கக்கொடுங்கள்; வாசிக்கத்தெரியாதவர்கட்கு வாசித்துக்காண்பியுங்கள்; ஊர்கடோறும் இந்துக்கள் யாவருங் கூட்டங்கூடி நமது திருவிழாக்காலத்திலும் மற்றக்காலங்களிலும் நமது ஆலயங்களுக்குச் சமீபத்தில் பாதிரிகள்வந்து நம்மதம், சாஸ்திரம், விக்கிரகம், உற்சவமுதலியவற்றைத் தூஷித்துப்பிரசங்கம் செய்துவருவது அக்கிரமமென்றும் சட்டவிரோதமென்றும்பேசி, இவ்விஷயத்தைப்பற்றிக் கவர்ன்மெண்டாருக்கு மனுசெய்துக்கொள்ளுங்கள்; செய்வீர்களேயானால்அவர்கள் பாதிரிகள் பிரசங்கத்தைத் தடுத்துவிடுவார்கள். ஒவ்வொரு ஊர்களிலும் இவ்வாறு செய்தல்வேண்டும். பாதிரிகளுடைய பணத்துக்கிச்சைகொண்டோ, அவர்களுடையசம்பளத்தைப் பெறுங்காரணமாகவோ, நம்மவரிற் சிலர் அதற்குவிரோதமுந் தேடுவார்கள்; அதை நாம் பொருள்படுத்தாது காரியத்தை விடாமுயற்சியாய்ச் செய்யவேண்டும். இதுதான் நல்லசமயம்; எல்லோருங் கிறிஸதவரான பிறகா இப்படிப்பட்ட நற்காரியங்களைச்செய்வது?

பாதிரிகள் ஜனங்களுடைய மனக்கொதிப்பையும், கோபத்தையும் மேன்மேல் விருத்திசெய்து வருகின்றார்கள். இது பெருங்கெடுதியை யுண்டாக்கும். சிறசிலவிடங்களிற் போலீசார் பாதிரிகளுக்குச்சகாயமாயிருப்பதாயும், ஐரோப்பிய சலக்டரும் அனுசரிப்பதாயுந்தெரிகின்றது. இதைக்கேட்கக்கேட்க ஜனங்களுக்கு அதிகமனஸ்தாபத்தை [illegible]ளிக்கின்றது. இவ்விடயத்தைக்கவர்ன்மெண்டார் நன்று யே[illegible]வேண்டியது. அதிலும்

அவர்கள் அவசியங்கவ
ளியெறியப்படுவது, நாளை
ழுது கவனியாவிடில்பெருங்கு
னு மானிக்கத்தக்கதாயிருக்கும்;
முன்யோசனை யுள்ளவர்கள்;
யினும் எமக்குத்தோன்றியவை
க்தேம். பாதிரிமார் இனி எவ்வி
த தாபத்தையுண்டேபண்ணுகிருக்கத்
த ம். இந்துக்கள் சாதுக்கள்; க்ஷமை
யு த்தில் னைத்துரும்பாய் நினைப்ப
வா க்கின்ற ருதப்படாது. "சா
து கொள்ள பழமொழி யொன்
றி வேண்டும் கவர்ன்மெண்டில்
இ தபிரீதி; ப லா! வெகுவிரோ
ம- ற்றுண்டான த நெடுநாளாயிருக்கிறது.
ஆ ண்டுக்குக்கட்டுப்பட்டிருக்கின்றார்கள். இதை
ய மெண்டார் நடந்துகொள்ளவேண்டும். ஐரோப்
பி பண்டிதர்களே கிறிஸதுமதத்தை வெறுக்கின்
றார் ால் அம்மதம் காரணமாக மிஷனரிகள்மீது
கவ ார் பட்சமாயிருத்தல்கூடாது. முக்கியமாகநா
மு யாதெனின், வர வரப்பாதிரிகள்பேரில் இந்துமகா
நக்கு மனஸதாபமுண்டாக்கிக் கொண்டேவருகின்
றது மனத்தாபமின்றுண்டானதன்று; நெடுநாளாய்மதத்

திலூறியிருந்தது. எத்தனையோ குடும்பத்தார் வயிற்றில் நெருப்பைக் கொட்டினவராகலின் அவர்களொருபோதும் பாதிரிகளை மறக்கமாட்டார்கள். பாதிரிகளுற்சவங்களிலும்மற்றக்காலங்களிலும் இந்துக்கள், "அப்படிப்பட்டவர்கள் இப்படிப்பட்டவர்க,,ளென்று பாதிரிகளைத்தூக்கிவைத்துப்பேசுவதுண்டு அது மனோசாட்சிக்குவிரோதம். பாதிரிகளிடத்தில் உத்தியோகஞ்செய்வதொன்று; கலெக்டர் முதலியவரிடததுச் சிபார்சுபெறலாமென்பதொன்று; கலெக்டர் முதலியவரிடத்துச்சொல்லி உள்ளவுத்தியோகத்திற்குகெடுதிசெய்விக்கப்போகிறார்களென்னும்பயமொன்று; கலெகடர் முதலியவர் சபாநாயகராகவிருக்கும்பொழுது நாம் விரோதமாய்ப்பேசப்படாதென்பதொன்று; பாதிரிமார் வெள்ளை முகமாயிருக்கின்றார்களென்பதொன்று; இவைபோல் பலகாரணங்களாலேதான் பாதிரிகளைஇந்துக்கள் இந்திரன், சந்திரன், சர்ணன் என்று ஆகாயத்தில் தூக்கிவைக்கிறார்கள்; அன்றி அவர்களுடைய சிபாரிசினால் உத்தியோகம் பெற்றவர்களும், அவர்கள்ஸ்கூலில்படித்தவர்களும், அவர்களுடையஸ்காலர்ஷிப் பெற்றவர்களும், அவர்களிடத்தில் தனியே 10, 20 ரூபா மாசமாசம் வாங்கிக் குடும்பஜீவனமும் செய்து அவர்கள்ஸகூல்களிலே படித்தவர்களும் நன்றாய்ச் சாப்பிடலாம் நன்றாயுடுத்தலாம் இன்னும் எப்படி வேண்டுமானாலும் திரியலாம்; இந்துமதத்தில் கட்டுக்காவலதிகமா யிருக்கின்றனவென்று கருதி அதுகாரணமாகக் கிறிஸதுமதத்தில் அபிமானமுள்ளவர்களும் அதுகாரணமாக, அம்மதத்தில்சேர விரும்புகின்றவர்களும் பாதிரிகளை மகிமையாய்ப் பேசுவார்கள். அவ்வளவேயன்றி யுண்மையில் அவர்கள் பேரில் வெறுப்பேயாம்.

"பாதிரிகள் கல்வி கற்பிக்கின்றார்கள், வைத்தியசாலைவைக்கின்றார்கள், க்ஷாமகாலத்தில் அன்னந்தருகின்றார்கள்,, என்றுசிலர் அவர்களை மதித்துப்பேசுகின்றார்கள். அப்படியுரைக்கின்றவர்களுக்குஒருகதையைஞாபகமூட்டுகின்றோம். அஃதாவது:

ஆகாரம் வைத்திருக்கும் எலிபிடிக்கும் யந்திரத்தை யெலிக்குஞ்சுகண்டு, "இவ்வீட்டிலுள்ளார் வெகு நல்லவர்கள் பூனையின் வாயிலகப்படாதபடிப் பலமானவிரும்புத்தம்பங்கள் நாட்டிய அழகானசிறியவீடு நமக்காகச்செய்து, அதில் நாம்பிரீதியோடு தின்னும் ஆகாரங்கள் வைத்திருக்கின்றார்கள் ,,என்று சொல்லியகதையேயாம். இக்கதையினுண்மையையுணர்ந்தார்,பாதிரிமார்களை ஓர்போதும்மறந்தும் உத்தமரெனமதியார். இந்து மதவிஷயத்தில் தலைப்பிட்டுக்கொண்டு, அதையிகழ்ந்து, இந்துக்களை அக்கிரமமாய்க் கிறிஸ்துவராக்கக் கருதாத பாதிரிமார்களிருப்பார்களானால் அவர்களை நாம்புகழ்ந்து கூறத்தக்கவர்களாயிருக்கின்றோம்.

சுதேசி.

திரிசிரபுரி ஆரியதத்துவ வித்தியாசாலா

ஐயா,

தத்துவ ஆதாரமுள்ளதும் சுருதியுக்தி அனுபவமுள்ளதுமான நம்மிந்துமதந் தொன்றுதொட்டு வழங்கு மிப்பாரதகண்டத்தில் மிலேச்சர்களாகிய பாதிரிகள் குடிபுகுந்து, அவிசேஷம்நிறைந்த சுவிசேஷமென்னும் புஸ்தகத்தை பால்மணமும் மாறாத நம்மிந்து வாலிபர்களுக்குப்போதித்துக் கொடுக்கலாமென்றதுரெண்ணங்கொண்டு ஆங்காங்கு கலாசாலைகளேற்படுத்தித் தங்களெண்ணத்தை முற்றுவிக்க வெகுகாலமாய் முயன்றுவருகின்றனர். நம் வாலிபர்களுக்கு வீட்டில் மதப்பயிற்சி சிறிதுமின்மையாலும், வாலிபர்கள் மனம் களிமண்போன்று செல்லக்கூடாதவிடமெல்லாம் போதிக்கும்வழிச்செல்லு மாற்றலுடையதாதலாலும், இந் தேசத்தில் பெரும்பாலாயுள்ள பாதிரிகள் பள்ளிகளிலிவ்வாலிபர்களுக்கு இந்துசமய தூஷணங்களே கிறிஸ்தவமதபோதக மாகையாலும், நஞ்சிறுமியர் இப்பாதிரிகள் சொல்லுந் தூஷணமொக்குமென்று மதிமயங்கிக் கிறிஸ்துசமயப்படுகுழியி லமிழ்கின்றார்கள். இதைக்கண்டிரங்கி நாம்நமது வாலிபர்களவ்வாறு கெடாமலுய்யும்வண்ணம் ஆரியமதத்தின் நீதிகளை யவர்களுக் குணர்த்தும்பொருட்டு "ஆரியதத்துவ வித்தியாசாலா,, என்ற அற்புதநாமஞ்சூட்டி ஓர் கலாசாலையேற்படுத்தியிருக்கின்றனம். இது சென்றவொன்பதுமாதகாலமாய் நடைபெற்றுவருகின்றது. இது நான்குவகுப்புகளடங்கியது; இதில் சுமார் 150 பிள்ளைகள்வரையில் படிக்கின்றார்கள்; மாதந்தோறும்ப்பிள்ளைகளை ப்ரீட்சைசெய்து வெகுமதியாகப் புத்தகங்களும் அளிக்கின்றோம்; சைவ, வைஷ்ணவ, மாத்வ, ஸ்மார்த்தமுதலிய வுட்பிரிவுகளடங்கிய நம்மிந்துமதப்பொதுவிஷயங்களையே பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொடுக்கிறோம்.

இங்ஙனம்

ஆங்கரை பஞ்சாபகேசசாஸ்திரிகள்.

'வித்தியாசாலை ஸ்தாபகர்

உ

விளம்பரம்.

(1) இராம்நாதபுரம் வைதீகசமய சித்தாந்தசபையார், இதனால் யாவருக்குந்தெரிவிப்பதியாதெனில், வைதிகசமயத்தை விருத்திபண்ணும்பொருட்டு இதனடியிற்கண்டிருக்கும் புத்தகங்களின் பாகத்தைப்படித்துக்கொண்டு ஒவ்வொரு வருஷத்தின் வைகாசிமாதத்திலும பரிக்ஷைக்கு வருகிறவர்களைப் பரிக்ஷித்துத்தேறுகிறவர்களின் திறமைக்குத் தக்கபடி முதல் 5 பேருக்கு ரூபா 50-முதல் ரூபா 10-வரையில் இனாமும் மற்றவர்கட்கு வகைவிபரமான சர்ட்டிபிக்கெட்டும் கொடுப்பார்கள்.

(2) ஷை புத்தகங்கள் வாங்கத்திறமையில்லாதவர்கள் ஷை சபையில் வேண்டிய உதவியை யடையலாம.

படிக்கவேண்டிய புத்தகங்கள்.

(3)— க. தேவாரம் ஸ்தலமுறையில் 'திருவாலவாய்ப்பதிகங்கள்',

உ. தாயுமானசுவாமிகள் பாடலில் "எங்குநிறைகின்ற பொருள், தேஜோமயானந்தம்.,,

ங. திருவாய்மொழியில் "முதல் நூறுபாடல்கள்,,

ச. சைவவினாவிடை "முதலாவதுபாகம்,, (ஆறுமுக நாவலர் பதிப்பு)

ரு. விஷ்ணுபுராணம் "ஐந்தாவது அம்சம்,,

(4) க, உ, ங, இவற்றைப் பிழையில்லாமற் பாராமல் ஒப்புவிக்கவும், ச, ரு, இவற்றில் கேட்டகேள்விகட்குத் தக்க பதில்கொடுக்கவுந் திறமைவேண்டும்.

(5) ஒவ்வொரு பாகங்களிலுந் தவறாமல் அரைக்கால்வாசி தேறவேண்டும்.

(6) பரிக்ஷிக்கப்பட விரும்புகிறவர்கள் பரிக்ஷைக்கு ஒருமாதத்திற்கு முன்னமே எழுத்துமூலம் சபையாருக்குத் தெரிவித்துக்கொள்ளவேண்டும்.

சர்வதாரி௵
ஆடிமீ கஉ
இராமநாதபுரம்

வைதிகசமய
சித்தாந்தசபையார்.

பத்திராதிபரபிப்பிராயம்.

காங்கிரெஸ்வினாவிடை.

மேற்கண்ட புத்தகம் நமக்கு ஒன்றுகிடைத்தது. இஃது முன்னிருந்ததைக்காட்டிலும் பலநூதனஅரிய விடயங்களை அடக்கிக்கொண்டு 40-பக்கங்களோடு முடிவு பெற்றிருக்கின்றது. நம் பரதகண்டத்தைக்காட்டிலும் எவ்வளவோமடங்கு சிறிதாயும், ஜனத்தொகையிலும் எவ்வள்வோகுன்றியதாயுமிருக்கிற மேற்றிசையார் வெகு விமரிசையாய் அரசுசெலுத்திநம்மை ஆண்டுவருவதற்குக் காரணம் யாதெனில், அவர்களுள் குடிகொண்டிருக்கும் ஒற்றுமையினால்தான். அவ்வித ஒற்றுமை நம்மவர்க்கு முண்டாகும்பொருட்டு ஒவ்வொருவரும் மேற்கூறிய "காங்கிரெஸ்வினாவிடை,, என்னும் புத்தகத்தைவாங்கி வாசிப்பது அத்தியாவசியகம். தனவான்களே! மடாதிபதிகளே! ஜமீன்தார்களே! இப்புத்தகத்தைவாங்கி எங்கும் பரவச்செய்யுங்கள். இதனால் உங்களுக்கு மெத்த சுகிருதமுண்டு. இப்புத்தகத்தை எமக்கனுப்பிய ஆக்கியோனுக்கு யாம் அகமகிழ்ந்து வந்தனமளிக்கப்பாலதாம்.

காங்கிரஸ் வினாவிடை.

மேற்கண்ட சிறிய புத்தகம் மறுபடியும் அச்சிடப்பட்டிருக்கின்றது. இந்தப்பதிப்பில் பற்பலநூதனவிஷயங்களையும் காணலாம். அங்கிலேய நாட்டிலுள்ள துரைத்தன முறைமையைப்பற்றியும், அவர்களித்தேசத்தில் அனுஷ்டித்துவரும் ஆசியல்பைப்பற்றியும், இத்தேசத்தார் செய்யவேண்டிய கடமைகளைப்பற்றியும் அதில் விவரித்துப் பேசப்பட்டிருக்கின்றது. இப்போது அப்புத்தகம் ௪௰-பக்கங்களடங்கியிருக்கின்றது. இப்புத்தகத்தை நமது தேசத்து அபிமானிகள் எங்கும் இறைத்து இங்குள்ள மகாஜனங்களுக்குப் பொது விஷயத்தில் கியானத்தையும் தேசாபிமானத்தையும் உண்டாக்கி வருவார்களேயாகில் அவர்கள் வெகு சுகிர்தத்தைப் பெறுவார்கள். இகத்திலும் க்ஷேமப்படுவார்கள். பரத்திலும் சுகிர்தத்தைப்பெறுவார்கள். கோயில் கட்டுவதிலும், சத்திரங்கள் கட்டிவைப்பதிலும், அன்னம் போடுவதிலும் உண்டாகும் புண்ணியத்தைவிட ஜனங்களுக்குக் கியானத்தை யுண்டாக்கிவைக்கும் புண்ணியம் மிக மேலானதே. ஆதலால் நமது இராஜதானியிலுள்ள தேசாபிமானிகளும் அங்கங்குள்ள காங்ரெஸகமிட்டிகளும் இச்சிறிய புத்தகத்தில் பலபிரதிகளைவாங்கி அங்கங்குள்ள மகாஜனங்களுக்கு தானம்செய்வார்களென்று நம்புகிறோம். இச்சிறுபுத்தகத்தின் முகவுரையில் இவ்வாறுசொல்லப்பட்டிருக்கின்றது:

அங்கிலேயநாட்டாரித்தேசத்தைக் கைப்பற்றி அநேக அவர்கள் ஆண்டுவருவதற்கு இத்தேசத்தார்செய்த தவப்பயனே காரணமாம். என்றும் எங்கும் ஜனவாக்கியத்தையே பிரமாணமாகக்கொண்டு அங்கிலேயர்கள் அரசுமுறைமையைச் செலுத்திவருபவர்களானபடியால் அவர்களித்தேசத்தில் அனுஷ்டித்துவரும் துரைத்தன முறைமையையும் அவர்கள் பிரஜைகளாகிய நாம் செய்யவேண்டிய கடமைகளையும் இந்த பரத கண்டத்திலுள்ள எவரும் அறியவேண்டியது அவசியம். அவ்வெண்ணத்தைக்கொண்டே இச்சிறிய புத்தகத்தைப் பிரசுரஞ்செய்தேனாகையால், சற்புருஷர்கள் சந்தோஷப்பட்டு பிழைகளைப்பொறுத்து தனிகர்கள் இதில் பல்லாயிரங்காபிகள் விலைக்கு வாங்கி இதை எங்கும் பரவச்செய்து இத்தேசத்து மகாஜனங்களுக்கு துரைத்தன முறைமையில் கியானத்தைஉண்டாக்கி வருவார்களென்று பிரார்த்திக்கின்றேன்.

காபிகள் வேண்டுவோர் இச்சென்னை மவுண்டுரோட்டு நாஷனல் பிரெஸ் அச்சுக்கூடத்தின் மானேஜருக்கு எழுதி பெற்றுக்கொள்ளலாம்.

விலை விவரம்.

	ரூபா.	அ.	பை.
I-காபி விலை	0	I	0
I0- ஷை	0	8	0
25. ஷை	I	0	0
I00. ஷை	3	8	0
250- ஷை	8	0	0
500. ,,	14.	0	0
I,000- ,,		0	0

ப்ரம்மவித்தியா பத்திரிகையின் அபிமானிகளாகிய கனவான்களே!! இஃதைக் கவனியுமின்!

உங்கள் கையினின்றும் வரப்பட்ட பொருளுதவியினாலன்றோ பத்திரிகை தளர்வின்றி விருத்தியாகவேண்டும்? யாம் பலதடவைகளில் அறிவித்த அறிக்கைகளைக் கவனியாமலும், அல்லது வேண்டாமென்று பதிலளியாமலும் பத்திரிகையை மாத்திரம் வரப்பெற்றுக்கொண்டுவந்தால் அவைகளைச்சார்ந்த செலவுகளுக்கு என்செய்வோம். நம்பத்திரிகை மூன்றாம் வருடம் துவக்கி ஆறுமாதமானபடியால் இனித்தாமதியாமல் இதற்குமுன் பாக்கியிருப்பவைகளையும் அனுப்பிவிடுக.

இச்சிதம்பர க்ஷேத்திரத் திவ்வியாலயத்தைச் சேர்ந்த தீக்ஷிதர்களுக்குள் கலகமெல்லாம் ஒருவாறு அடங்கி சமாதானமாகவிருப்பதால், ஸ்ரீமந்நடராஜபெருமானுக்குச் சென்ற உற்சவம் நடந்தேறியதைக்காட்டிலும் இம்முறைஉற்சவம் வெகு ப்ரமானந்தமாய் நடக்கப்போகின்றது.

இவ்வூரில் வாந்திபேதி முன்கூறியதுபோல் அவ்வளவு தீவிரமாகயில்லை. இப்பொழுது சாந்தமாகவே யிருக்கின்றது.

இம்மதி 27-வயாகிய செவ்வாய்க்கிழமையன்று ஒரு பரதேசி இச்சிதம்பர தேவாலயத்தின்கண்ணுள்ள சிவகங்கையில் தற்செயலாக விழுந்திறந்தான். மிகப்பரிதாபம்.

“ [illegible] ”
[illegible]

[illegible]	௦	க	[illegible]
[illegible]	௦	க	[illegible]
[illegible]			
[illegible]	உ	௦	௦
[illegible]	௦	கஉ	௦
[illegible]	௦	அ	௦
[illegible]	௦	ச	௦

CHIDAMBARAM. Printed and Published
the Proprietor C. R. SREENIVASA SASTRIAL
at the Brahmavidya Press.